Australian Government
Aged Care Quality and Safety Commission

Engage
*Empower*
**Safeguard**

# உங்களுக்காக முதியோர் பராமரிப்பை மேம்படுத்துதல்

**இந்தப் புதிய 'முதியோர் பராமரிப்புச் சட்டம்', முதியோர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அதில் முதியோர்களுக்கான 'உரிமைகள் கூற்று' ஒன்றும் அடங்கியுள்ளது. இந்த மாற்றங்கள் 1 நவம்பர் 2025 முதல் அமலுக்கு வந்தன.**

'உரிமைகள் கூற்று' , உங்கள் முதியோர் பராமரிப்பில் நீங்கள் மையமாக இருப்பதை உறுதி செய்கிறது. அது உங்களுக்கு பின்வரும் உரிமைகளை வழங்குகிறது:

- உங்கள் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை நீங்களே எடுக்க
- உங்கள் முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுவது மட்டுமல்லாமல், மதிக்கப்படவும் கூட
- முடிவுகளை எடுக்க உங்களுக்கு உதவும் தகவல்களையும் ஆதரவுதவியையும் நீங்கள் பெற
- உங்கள் விருப்பங்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைத் தெரிவிக்க
- பாதுகாப்பாகவும் மதிக்கப்படுவதாகவும் உணர
- உங்கள் கலாச்சாரமும் அடையாளமும் மதிக்கப்பட
- உங்கள் சமூகத்துடன் தொடர்பில் இருக்க.

உங்கள் முதியோர் பராமரிப்புக் குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலைகள் அல்லது புகார்கள் இருந்தால், 'முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணையம்' உங்களுக்கு உதவத் தயாராக உள்ளது.

**1800 951 822**
**agedcarequality.gov.au**
**info@agedcarequality.gov.au**

'உரிமைகள் கூற்'றைப் பற்றி **மேலும் அறிய எங்கள் வலைத்தளத்தைப் பாருங்கள்.**

